**ஜீரோ பட்ஜெட் முருங்கை**



குழம்பு, வெஞ்சனம், அவியல் என அனைத்து வகையான உணவுகளுக்கும் பயன்படும் வெங்காயம், தக்காளி, தேங்காய் போன்ற காய்கறிகளில் முருங்கையும் ஒன்று. அதனால்தான் ஆண்டு முழுவதுமே அதற்கு சந்தையில் கிராக்கி, அதுவும் முகூர்த்த நாட்கள், விரத காலங்களில் சொல்லவே வேண்டியதில்லை. அவ்வளவு உச்சத்திலிருக்கும் முருங்கையின் விலை. தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தைச் சேர்ந்த அரவிந்தன். இத்தகைய முருங்கையை சாகுபடி செய்து வரும் தன் அனுபவங்களை பற்றி சொல்கிறார். “உழுதவன் கணக்குப் பார்த்தா உழக்கு கூட மிஞ்சாதுனு சொல்லுறதெல்லாம் மத்த பயிர்களுக்கு வேணும்னா பொருந்தலாம். முருங்கைக்குப் பொருந்தாது. ‘முருங்கையைப் போட்டவன் வெறுங்கையா நின்னதுல்ல’னுதான் நாங்களே சொல்வோம். அதனால் எங்கள் பகுதி முழுக்க முருங்கை சாகுபடி செய்துக்கிட்டிருக்கோம்.

“எங்களுக்கு சொந்தமா கிணறோட நாலு ஏக்கர் நிலமிருக்கிறது. செம்மண் பூமிதான். அதில் எங்கப்பா காலத்தில் இருந்தே ரெண்டரை ஏக்கரில் யாழ்ப்பாணம், குருஷ், சாகவச்சேரி, பி.கே.எம்-1 இப்படி மரமுருங்கை, செடிமுருங்கைனு பல ரகங்கள்ல 500 முருங்கை மரங்கள் இருக்கிறது. முருங்கை மரங்களுக்கு இப்போ பதினெட்டு வயதாகிறது. நான் விவசாயத்துக்கு வந்தப்பொழுது ரசாயன முறையில்தான் ஆரம்பித்தேன். இரண்டு வருடத்துக்கு முன்னர் தற்செயலாக பசுமை விகடனைப் படிக்கிற வாய்ப்பு கிடைத்தது. அதிலிருந்தே தொடர்ந்து படிக்க ஆரம்பித்தேன். அப்படித்தான் ஜீரோ பட்ஜெட் எனக்கு அறிமுகம். ‘அப்படி என்னதான் அதுல இருக்கு’னு தெரிஞ்சுக்கணும்னு ஆசைப்பட்டு நாட்டுமாடு ஒன்றை வாங்கினேன். சாணம், கோமூத்திரத்தை வைத்து ஜீவாமிர்தம் தயாரிக்க, வாழை, முருங்கைனு கொடுத்தேன். இரண்டு தடவை ஜீவாமிர்தம்

கொடுத்ததுமே பயிர்ல செழுமை கூடி நல்ல வித்தியாசம் தெரிஞ்சது. அந்த நிமிடமே ரசாயனங்களுக்கு விடை கொடுத்துவிட்டேன். தொடர்ந்து ஜீவாமிர்தம் பாய்ச்சுனப்பொழுது பூச்சிகளோட தாக்குதலும் குறைவாக இருந்ததும், நான் இயற்கை விவசாயத்துக்கு மாறினதுக்கு ஒரு காரணம். என் தோட்டத்து முருங்கை மரங்களில் பூச்சிகள் தாக்காம இருக்கறதைப் பக்கத்து விவசாயிகளெல்லாம் ஆச்சரியமாகப் பார்க்கிறார்கள்.விளையாட்டாகி ஆரம்பித்தது இன்னிக்கு எனக்கு வருமானத்தை அள்ளிக் கொடுத்துட்டு இருக்கிறது. நான் செடிகளா எந்த முருங்கையையும் வைக்கவில்லை. என் தோட்டத்தில் இருக்கிற மரங்களில் இருந்து கிளைகளை ஒடித்துத்தான் நட்டேன்.

ரகத்துக்கு ரகம் இடைவெளி மாறும்!

மர முருங்கைக்கு செம்மண் மிகவும் ஏற்றது. மழைக் காலங்களில் முருங்கை நடவு செய்யும்போது ‘முருங்கைப் போத்து’ (முருங்கைக் கிளை ) அழுகி விடுவதற்கான வாய்ப்புகள் அதிகம். எனவே, வெயில் காலங்களில் (மார்ச் மாதம்) நடவு செய்வது நல்லது. அதிகமாக நீர் பாய்ச்சுவதும் தேவையில்லாத வேலை என்பதால், சொட்டு நீர்ப் பாசம் அமைத்துக் கொள்வது நல்லது. நடவுக்கு இரண்டரை அடி நீளமுள்ள முருங்கைப் போத்துக்களை தரமான தாய்மரத்தில் இருந்து சேகரிப்பது அவசியம். மர முருங்கையைப் பொறுத்தவரை ஒவ்வொரு ரகத்துக்கும் நடவுக்கான இடைவெளி வேறுபடும். யாழ்ப்பாணம் மற்றும் பி.கே.எம்-1 ஆகிய ரகங்களுக்கு 15 அடி இடைவெளி தேவை. குருஷ் ரகத்துக்கு 20 அடியும், சாகவச்சேரிக்கு 25 அடியும் இடைவெளி தேவை. பொதுவாக 15 அடிக்கு மேல இடைவெளி தேவை. பொதுவாக 15 அடிக்கு மேல இடைவெளி இருந்தால்… முருங்கை மரங்களில் நல்ல காய்ப்பு இருக்கும். ஒவ்வொரு ரகங்களில் கிடைக்கும் மகசூலும் வேறுபடும் என்பதால், இடைவெளி அதிகரிக்கும் போது மரங்களின் எண்ணிக்கை குறைவதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. சராசரி மகசூல் ஏறத்தாழ ஒன்றாகவே இருக்கும். தேர்வு செய்யும் ரகத்துக்கேற்ற இடைவெளியில் ஒரு கன அடி அளவுக்கு குழி எடுத்து, குழியின் நடுவில் முருங்கைக் கிளையை நடவு செய்து மண்ணை நன்கு அழுத்திவிட்டு தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

இரண்டரை அடி நீளக் கம்பில் ஒரு அடி மண்ணுக்குள்ளும் ஒன்றரை அடி குழிக்கு மேலும் இருக்கும். வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதும். அதிகமாக தண்ணீர் பாய்ச்சினாலும்

கம்பு அழுகி விடும் வாய்ப்பு இருப்பதால், காய்ச்சலும் பாய்ச்சலுமாக இருக்க வேண்டும். ஜீரோ பட்ஜெட் முறை என்பதால், பெரிய அளவில் பராமரிப்புக்கானத் தேவை இருக்காது.

பத்து நாட்களுக்கு ஒரு முறை, பாசன நீருடன் மரத்துக்கு அரை லிட்டர் என்ற கணக்கில் ஜீவாமிர்தத்தைக் கலந்து விட வேண்டும். அதிகமாகக் கொடுத்தாலும் பிரச்சனையில்லை. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு மரத்தின் அடியிலும் சிறிய பள்ளம் எடுத்து மரத்துக்கு பத்து கிலோ தொழுவுரத்தை இட்டுக் குழியை மூடிவிட வேண்டும். வருடத்துக்கு ஒரு முறை மரங்களின் பக்கக் கிளைகளை கவாத்து செய்ய வேண்டும். காய்ப்பு அதிகம் இல்லாத ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் கவாத்து செய்வது நல்லது. முருங்கையில் பொதுவாக நூற்புழுத் தாக்குதல் இருக்கும். இலை, பூ, காம்புகளை இப்புழு சாப்பிட்டுவிடும். இதே போல கங்கணம் பூச்சி, முருங்கையின் வேரைத் தாக்கி மரத்தையே அழித்து விடும். முருங்கையின் இன்னொரு முக்கிய எதிரி தேயிலைக் கொசு. இவை மொத்தமாகப் படையெடுத்து வந்து மரத்தில் உள்ள அனைத்து இலைகளையும் சாப்பிட்டு மரத்தையே மொட்டையடித்து விடும். இவை தாக்கினால் இயற்கைப் பூச்சி விரட்டிகளை உபயோகப்படுத்தி கட்டுப்படுத்தலாம். பொதுவாக ஜீரோ பட்ஜெட் விவசாயத்தில் பூச்சித் தாக்குதல் அவ்வளவாக இருக்காது. நடவு செய்த நான்காம் மாதத்தில் இருந்தே மரங்கள் காய்க்கத் தொடங்கி விடும். ஆனால், இரண்டாம் வருடத்தில் இருந்துதான் அதிகளவில் காய்கள் கிடைக்கும். வருடத்துக்கு எட்டு மாதங்கள் வரை கிடைக்கும். அதிக மழை பொழியும் நேரங்களில் காய்க்காது.

இரண்டரை ஏக்கரில் ஆண்டுக்கு 60 டன் அளவுக்கு மகசூல் கிடைக்கும். சரியான முறையில் கவாத்து செய்து பராமரித்து வந்தால், பல ஆண்டுகள் வரை மரங்கள் காய்த்துக் கொண்டிருக்கும். அதிக வயதாகி மகசூல் குறையும் காலங்களில் மரங்களை அழித்து புதிதாக நடவு செய்து கொள்ளலாம். சாத்தான்குளத்தில் போலையர்புரம் பகுதியில் முருங்கைக்காய் கொள்முதல் செய்யுறதுக்கு ஏகப்பட்ட கடைகள் இரக்கிறது. தினமும் ஏகப்பட்ட விவசாயிகள் டூ விலர்ல, ஆட்டோனு முருங்கைக் காய்களை கொண்டு போய் கொடுப்பாங்க. இங்கே இருந்து வெளிநாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதியாகிறது. ஆனால் நான் திருநெல்வேலிச் சந்தையிலதான் காய்கள் விற்கிறேன். எனக்குத் தெரிந்து கிலோ எட்டு ரூபாய்க்கு குறைந்து விற்றதில்லை. நல்ல சீசன் நேரங்களில் கிலோ நாற்பது, ஐம்பது ரூபாய் வரை கூட போகும்.

சராசரியா வருடத்துக்கு 50 டன் காய்களுக்கு குறைந்தபட்ச விலையாக எட்டு ரூபாய்னு வைத்துக் கொண்டாலே 4 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும். ரசாயன முறையில் செய்த பொழுது ஆன செலவை விட, இப்போ வருடத்துக்கு முப்பதாயிரம் ரூபாய் வரைக்கும் செலவு குறைந்திருக்கிறது. அதே சமயம், கொஞ்சம் கொஞ்சமாக மகசூல் கூட ஆரம்பித்திருக்கிறது. அதில்லாமல் காய்கள் நன்றாக திரட்சியாக இருக்கிறதால் கழிவுகள் அதிகமாக வருவது இல்லை. தோட்டம் முழுவதும் மூடாக்குப் போட்டு, சொட்டுநீர்ப் பாசனத்தைத் தெளிப்பு நீர்ப்பாசனமாக மாற்றலாம்னு இருக்கிறேன். அதே மாதிரி இன்னமும் ஜீவாமிர்தத்தை அதிகப்படுத்தி மழைக் காலங்கள்லயும் காய்களைக் காய்க்க வைக்கிறதுக்கு முயற்சி பண்ணிட்டு இருக்கிறேன். அதையெல்லாம் பண்ணிவிட்டால் இன்னும் அதிகமான மகசூல் கிடைக்கும்னு எதிர்ப்பாக்கிறேன்.

**தொடர்புக்கு**

அரவிந்தன்

அலைபேசி : 99412-04063